இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் துறை
சட்டமாணிப் பட்டக்கற்கை – மட்டம் III
இறுதிப் பரீட்சை – 2023/2024
ஓப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம் – LLU3505
காலம்: 03 மணித்தியாலங்கள்

**திகதி: 21.05.2025** **நேரம்: பி.ப. 01.30 – பி.ப. 04.30**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை: 08.**

**பகுதி I இலிருந்து ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து நான்கு வினாக்களையும் தேர்ந்தெடுத்து, மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

## பகுதி I – ஒப்புரவு

**இப்பகுதியிலிருந்து ஒரு (01) வினாவுக்கு மட்டும் விடை தருக.**

01. "ஒப்புரவானது சட்டப் பிணக்குகள் சிலவற்றில் மிக்க நெகிழ்வானதும் மனச்சாட்சி அடிப்படையிலுமான தீர்வுகளை வழங்கி, பொதுச் சட்டத்தின் கடினமானதும் மட்டுப்பாடுமிக்கதுமான நிலைக்கு பதிலொன்றாக விருத்தியடைந்துள்ளது. ஒப்புரவின் மிகமுக்கிய பண்புகளில் ஒன்றே இழப்பீடு முதலான சட்ட நிவாரணங்கள் திருப்தியற்றதாகக் காணப்படுமிடத்து நியாயத்தினை உறுதிசெய்யும் அதன் நிவாரணக் கட்டமைப்பாகும்."

    இக்கூற்றின் துல்லியத் தன்மையை நுணுக்கமாக ஆராய்க.

    (20 புள்ளிகள்)

02. "ஒப்புரவு பொதுச் சட்டத்தின் கடினத்தன்மைக்கு பிரதியீடாக வடிவமைக்கப்பட்டுள்ள நீதி முறைமையொன்றாக பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்துள்ளது. நியாயம், மனச்சாட்சி மற்றும் தார்மீக ஒருமைப்பாட்டை பிரதிபலிப்பதும் மிகவும் பரந்துபட்ட சட்டக்கட்டமைப்புக்களில் நீதித்துறைத் தற்றுணிபை வடிவமைப்பதுமான ஒப்புரவு மூதுரைகளே இம்முறைமைக்கான மையமாகும்."

    மேற்கண்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?
    நவீன சட்டத்தில் குறைந்தது **நான்கு ஒப்புரவு மூதுரைகளின்** தொடர்ச்சியான இயைபாந்தன்மையையும் நடைமுறைப் பிரயோகத்தையும் நுணுக்கமாக ஆராய்க.

    (20 புள்ளிகள்)

## பகுதி II – நம்பிக்கைகள் சட்டம்

### இப்பகுதியிலிருந்து நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.

03. திரு. உபாலி என்பவன், தனது இறுதி விருப்பாவணத்தில், இலங்கைச் சட்டத்தின் கீழ் வெளிப்படை நம்பிக்கைகளின் வலிதுடைமை தொடர்பான கேள்விகளை உண்டாக்கும் சில கையளிப்புக்களைச் செய்தான். முதலாவதாக, அவன் துபாயிலிருந்து இலங்கைக்கு முறையற்ற விதத்தில் கொண்டுவந்த தங்க ஆதனங்கள் தனிப்பட்ட முறையில் விற்கப்பட்டு அதன் வருவாய்கள் அவனது மகன் பஹன் என்பவனின் நலனுக்காக பயன்படுத்தப்படும் வகையில் தனது நண்பன் சுதேஷ் என்பவனுக்கு வழங்கப்பட வேண்டும் என்று நெறிப்படுத்தினான். இரண்டாவதாக, கசுனின் பாட்டன் பாட்டிகளின் நலனுக்காகப் பயன்படுத்த தனது 16 வயது மூத்த மகன் கசுனுக்கு தனது பங்குச் சந்தையின் ஏதேனும் இரு இலாபம் ஈட்டும் முயற்சிகளின் முதலீட்டு வருமானம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவன் நெறிப்படுத்தினான். இறுதியாக, நொத்தாரிசு நிறைவேற்றமொன்றை மேற்கொள்ளாது எதிர்கால உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் தனது கிராமத்திலுள்ள சமூக சேவை அமைப்பின் உறுப்பினர்களது பயனுக்காக தனது மனைவி சந்தரேகாவை நம்பிக்கையாளராக நியமித்து, தனது தேங்காய் தோட்டத்தின் மீது நம்பிக்கையையொன்றை உருவாக்கவும் திரு. உபாலி முயற்சித்தான்.

இலங்கைச் சட்டத்தின் கீழ் மேற்கண்ட சூழ்நிலைகளில் வலிதான நம்பிக்கைகள் ஆக்கப்பட்டுள்ளனவா என ஆராய்க. நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

04. "தரும நம்பிக்கைகள் அவற்றின் பொது நலன் எனும் தேவைப்பாடு மற்றும் தனியாள் நம்பிக்கைகளுக்கு பொருந்தக்கூடிய முடிவற்ற தொடர்ச்சிக்கெதிரான விதி போன்ற தேவைப்பாடுகளின் விதிவிலக்கு காரணமாக நம்பிக்கைச் சட்டத்தில் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கையில், தரும நம்பிக்கைகள் சட்டக் கட்டமைப்பானது பெரும்பாலும் ஆங்கில சட்டக் கொள்கைகளின் செல்வாக்குட்பட்ட சட்டரீதியான விதிகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தின் சேர்க்கையில் வேரூன்றியுள்ளபோதிலும் சமூக மற்றும் கலாச்சார சூழல்களால் வடிவமைக்கப்பட்ட உள்ளூர் தழுவல்களுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது."

ஆங்கில மற்றும் இலங்கைச் சட்டத்தின் கீழ் தரும நம்பிக்கைகள் எனும் கருத்தேற்பு மற்றும் சட்ட ஒழுங்குமுறையை நுணுக்கமாக ஒப்பிடுக. உமது விடையில் தரும நம்பிக்கையொன்றின் வரைவிலக்கணம், வலிதாக்கல் தேவைப்பாடுகள், பொதுபயன்பாடு எனும் கொள்கையின் பங்கு மற்றும் இரு நியாயாதிக்கங்களிலும் தரும நம்பிக்கைகளை அங்கீகரித்து செயற்படுத்துவதிலுள்ள ஏதேனும் முக்கிய வேறுபாடுகள் அல்லது சவால்களையும் ஆராய்க. தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)



71

05. (அ) சித்தும் என்பவனும் பெத்தும் என்பவனும் மிக நெருக்கமான நண்பர்களாவர். ஒரு சந்தர்ப்பத்தில், சித்தும் பெத்துமுக்கு, பெத்துமின் சம்மதத்ததுடன் தனது தற்றுணிபின்பேரில் ரூபா 10,000 இனை கைமீட்டுக்கொள்ளும் வகையில் ரூபா 100,000 இனை நன்கொடையாக வழங்கினான். பின்னர், சித்தும் தனது தற்றுணிபைப் பயன்படுத்தி ரூபா 10,000 இனை கைமீட்கின்றான். சித்துமின் ரூபா 10,000 கைமீட்புக்கு பின்னர், பெத்தும் ஏற்கனவே குறித்த ரூபா 100,000 இனை தனது பிறந்தநாள் கொண்டாட்ட தயார்படுத்தலில் செலவிட்டுள்ளான்.

சித்துமுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) செல்வந்தத் தொழிலதிபர் ஒருவனான பவன் என்பவன், நன்கு அறியப்பட்ட தையல்காரனான சமனின் பங்காண்மை மூலம் துணி இறக்குமதி செய்யும் வணிகத்தை அமைத்தான். பங்காண்மை ஒப்பந்தத்தின்படி, இறக்குமதி செய்யப்பட்ட துணிகளை உள்ளூர் சந்தையில் ஊக்குவிப்பதும் விநியோகிப்பதும் சமனின் பொறுப்பாக இருந்தது. சில மாதங்களுக்குப் பிறகு, சமன், பவனுக்குத் தெரியாமல், SL Clothes Pvt. Ltd என்ற உள்ளூர் நிறுவனத்துடன் அவர்களுக்கு சில துணிகளை குறைந்த விலையில் வழங்குவதற்காக ஒப்பந்தமொன்றில் நுழைந்துள்ளான் எனவும் இவ்வேறுபாட்டுக்கு பெரியதொரு கமிஷனைப் பெற்றிருக்கின்றான் எனவும் பவன் அறிந்துகொண்டான்.

பவனுக்கு ஆலோசனை வழங்குக.

(10x2 = 20 புள்ளிகள்)

06. "நம்பிக்கையாளர் ஒருவர் நம்பிக்கையை நிருவகிப்பதில் அவரது கடமைகளை கண்டிப்பாக கடைப்பிடிப்பதோடு உயரியதொரு கவனிப்பையும் செயற்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார். நம்பிக்கையாளர் நல்லெண்ணத்துடன் செயற்பட்ட இடத்தில் அல்லது அவரின் செயல்கள் பயனாளிகளின் சிறந்த நலன்களுக்கு சேவையாற்றியதாக நம்பிய இடத்திலுங்கூட நம்பிக்கை மீறல் ஏற்படலாம்."

மேற்கண்ட கூற்றினை நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களின் நிழலில் நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. நவீன் என்பவனால் நிருவகிக்கப்படும் நம்பிக்கை ஒன்றின் பயனாளிகளாக சுபிபி (வயது 20), ஜனனி (வயது 18) மற்றும் துஷினி (வயது 12) என்போர் பெயர் குறிக்கப்பட்டுள்ளனர். மூன்று பயனாளிகளதும் ஒருமித்த பயனுக்கு நவீன் வைத்திருக்கும் இந்நம்பிக்கை ஆதனம் 25 ஏக்கரைக் கொண்ட இறப்பர் தோட்டத்தையும் 50 மில்லியன் பெறுமதிகொண்ட தங்க சேகரிப்பொன்றையும் உள்ளடக்குகின்றது. இதற்கு மேலதிகமாக, குறிப்பாக துஷினியின் பயனுக்காக 'Super Construction (Pvt) Ltd' இல் 40% பங்குதாரர் பங்கையும் அவன் வைத்திருக்கின்றான். ஒரு கட்டத்தில், ஜனனி நவீனை தங்க சேகரிப்பைக் பகிர்ந்தளிக்குவும், அவளுக்கு உரித்தாகவல்ல பங்கை அவளுக்கு ஒதுக்கவும் கேட்டுக்கொள்கின்றாள். சுபுபி, ஜனனி மற்றும் துஷினி என்போருக்குத் தெரியாமல், தனது மகளின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு நிதியளிக்க இறப்பர் தோட்டத்திலிருந்து வரும் இலாபத்தில் ரூபா 50,000 இனைப் பெற நவீனை தனிப்பட்ட முறையில் தூண்டுகின்றாள்.

அதைத் தொடர்ந்து, நவீன் தங்க சேகரிப்பின் கணிசமான பகுதியை விற்றதுடன் விற்பனை வருமானம் மற்றும் அவனது (தனிப்பட்ட) பணத்தின் சேர்வையை நாவல எனும் இடத்தில் அடுக்குமாடி ஒன்றை வாங்கப் பயன்படுத்துகின்றான். மேலும், 'Super Construction (Pvt) Ltd' இலுள்ள பங்குகள் அனைத்தையும் நம்பிக்கை ஒன்று இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தாதும் தேவையான சம்மதமின்றியியும் சிதிர எனும் தனிநபர் ஒருவனுக்கு தனது விருப்பப்படி விற்பனை செய்கின்றான். ஜனனி நவீனிடம் நம்பிக்கைக் கணக்குகளையும் தொடர்புடைய ஆவணங்களையும் அணுக வேண்டுமென தொடர்ச்சியாக வேண்டிவந்தாள். இருப்பினும், நவீன் பலதரப்பட்ட வீண்காரணங்ககளைக்கூறி வேண்டுமென்றே வேண்டிய தகவல்களை வழங்காது தொடர்ச்சியாக உதாசீனம் செய்துவந்தான்.

மேற்கண்ட பின்னணியில், இலங்கை நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான பயனாளிகளின் உரிமைகள் மற்றும் பொறுப்புடைமைகளை நுணுக்கமாக ஆராய்க. உமது விடை தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்தப்படுத்தல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

08. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டுக்கு** சிறுகுறிப்பு எழுதுக.

(அ) *In pari delicto* எனும் கோட்பாடு

(ஆ) சை-பிரஸ் கோட்பாடு

(இ) இலங்கையில் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 02

(ஈ) முன்னளித்தல் பற்றிய ஊகம்

(10x2 = 20 புள்ளிகள்)

-முழுப்பதிப்புரிமை பெற்றது-